4. அறிவிப்பு.

ஆளுநர் இசைவு—நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன் வடிவு 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வு செய்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்ட முன் வடிவு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு 1980

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.2) சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

66. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வீரியம் நீக்கப் பெற்ற சாராவி, மெதில் ஆல்கஹால், வார்னீஸ் (பிரெஞ்சு பாலீஷ்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் (P.&E.-IV) 14—1—1980 ஆம் தேதியிடப் பெற்ற 109 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

1980 ஜூலை 29]

67, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1979 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

68. தமிழ்நாடு சிமெண்டு நிறுவனத்தின் 31—3—1979ஆம் தேதி முடிவுள்ள ஆண்டு அறிக்கையும், கணக்குகளும் [1956ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*118. கோரிக்கை எண் 32—பிற்பட்டோர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

*119. கோரிக்கை எண் 56—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

@120. கோரிக்கை எண் 43—''பல்வகை'' அயல் நாடுகளில் உள்ள இந்தியர் தாயகம் திரும்பியோர், குடி பெயர்ந்தோர் துயர் தணிப்பும், மறு வாழ்வும், 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

*121. கோரிக்கை எண் 8—தேர்தல்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் மற்றும் நிதி அமைச்சரின் வரைவு உரை (தமிழ், ஆங்கிலம்).

*122. 1980-81 ஆம் ஆண்டில் பிற்பட்டோர் நலத் துறையின் செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்).

@123. 1980-81-ஆம் ஆண்டில் மறு வாழ்வுத் துறை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

*124. 1980-81 ஆம் ஆண்டில் பாசனம் மற்றும் நில நீர் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

---

*27—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

@25—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.